**சுருக்கம்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை - மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்பு – ரூ.23,37,07,500/- (ரூபாய் இருபத்தி மூன்று கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) மதிப்பீட்டில் 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின் (Tatkal Scheme) கீழ் 90 சதவீதம் மானியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉ-தி)துறை**

அரசாணை (நிலை) எண். 74 நாள்:29.08.2022

சுபகிருது வருடம், ஆவணி 13 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053
படிக்கப்பட்டது:-

தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண். ஜி2/ 1947/2022, நாள்.17.05.2022

********

ஆணை:-

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 2022-2023 ஆம் ஆண்டிற்கான துறை மானியக் கோரிக்கையின் போது கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

**"விவசாயத்திற்கான இலவச மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் துரித மின் இணைப்புத் திட்டத்தில் (Tatkal Scheme) செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குதிரைத் திறனுக்கேற்ப ரூ.2.50 இலட்சம் முதல் ரூ.4.00 இலட்சம் வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு, துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் (Tatkal Scheme) மின் இணைப்பு பெற 90 சதவீதம் மானியம் (ரூ.2.25 இலட்சம் முதல் ரூ.3.60 இலட்சம் வரை) வழங்கப்படும். இதனால் அரசிற்கு ஏற்படும் செலவு ரூ.23.37 கோடி ஆகும்."**

2. மேலே படிக்கப்பட்ட தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கடிதத்தில், 2022-2023 ஆம் ஆண்டின் புதிய அறிவிப்பின்படி 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு (900 ஆதிதிராவிடர் மற்றும் 100 பழங்குடியினர்) துரித மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்கிட ஏதுவாக 900 ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 90% மானியத்தொகை ரூ.2103.98 இலட்சம் மற்றும் 100 பழங்குடியினர் விவசாயிகளுக்கு 90% மானியத்தொகை ரூ.233.10 இலட்சமும் மொத்தம் ரூ.2337.08 இலட்சம் மாநில அரசின் நிதியிலிருந்து தாட்கோவிற்கு இத்திட்டத்தினை செயல்படுத்திட வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, பொருளாதார நிலையில் மிகவும் நலிவடைந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் என்பதால் துரித மின்இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்களில் 900 ஆதிதிராவிடர் விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் (இணைப்பு-I இல் உள்ளவாறு) ரூ.21,03,97,500/- (ரூபாய் இருபத்தொன்று கோடியே மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) மற்றும் 100 பழங்குடியின விவசாயிகள் பயன்பெறும் வகையில் (இணைப்பு-II இல் உள்ளவாறு) ரூ.2,33,10,000/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தி மூன்று இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) 90 சதவீத மானியத் தொகையாக மொத்தம் ரூ.23,37,07,500/- (ரூபாய் இருபத்து மூன்று கோடியே முப்பத்தி ஏழு இலட்சத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே, பத்தி-3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**"2225 – ஆதி திராவிடர் , பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 01 – ஆதி திராவிடர் நலன் – 102 – பொருளாதார முன்னேற்றம் – மாநிலச் செலவினங்கள் - AF - விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம் – 309 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை – ரூ.21,03,97,500/-**

**IFHRMS த.தொ.கு.2225 01102 AF 30903"**

**"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 102 – பொருளாதார முன்னேற்றம் – மாநிலச் செலவினங்கள் – AC - துரித மின்**

**இணைப்பு வழங்கும் திட்டம் – 309 – உதவித்தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை – 2,33,10,000/-**
**IFHRMS த.தொ.கு.2225 02 102 AC 30903"**

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோவின் கீழ்க்காணும் அலுவலர் பெயரில் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் IFHRMS-ல் காசோலை/வரைவோலை மூலம் எதிர்வரவாக வரவு வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் / பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**K – வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் – 8443-00-உரிமையியல் வைப்புத் தொகைகள் – 800 – பிற வைப்புத் தொகைகள் – BY – தமிழ்நாடு வீட்டு வசதி வளர்ச்சி கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் ( தாட்கோ) – 801 வரவுகள் – 02 வட்டி பெறாதவை. 802 – வழங்குதல் -02- வட்டி பெறாதவை.**
**(IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 801 02) (Receipt)**
**(IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 802 02) (Outgo)**

6. மேலே, பத்தி-3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு **"புது துணைப் பணி"** குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு (பொது-I))-த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாக கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A" யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு-செலவு (பொது-I))த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவை நிதி(ஆதி(ம)பந/வ.செ.பொது.I) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 3-இல் தெரிவிக்கப்பட்டவாறு அரசு மானியத்தில் துரித மின் இணைப்பு பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள், தங்கள் நிலங்களை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை செய்யக் கூடாது என்ற

நிபந்தனையுடன் கூடிய உறுதிமொழி ஆவணம் பெறப்பட்ட பின்னர் இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன், அத்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.40707/நிதி (ஆதி(ம)பந,) நாள்.27.08.2022 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.1093 (ஆயிரத்து தொண்ணூற்று மூன்று) (IFHRMS ASL NO.2022081093) உடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

தெ சு ஜவஹர்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்:-

இயக்குநர் , ஆதி திராவிடர் நலம், சென்னை-5.

இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5.

மேலாண்மை இயக்குநர் , தாட்கோ , சென்னை -18.

அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,

(ஆதி திராவிடர் நலம், இயக்குநரகம் வழியாக)

அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ.

(மேலாண்மை இயக்குநர் , தாட்கோ, வழியாக)

மாநில கணக்காய்வுத் தலைவர் ,சென்னை -9/18.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் , சென்னை -8.

மாவட்ட திட்ட அலுவலர் ,( பழங்குடியினர் நலம்)

(சேலம், தர்மபுரி, நாமக்கல், திருச்சி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர்)

நகல் :-

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு

நேர்முக உதவியாளர் , சென்னை -9.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர் , சென்னை-9.

நிதி (ஆதி (ம)பந)/ வரவு-செலவு (பொது-I/II/வ.வ-I) த்துறை , சென்னை -9.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு-1/ஆதிந-5/ப.மே-1)த்துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சாமிநாதன் 29/8/2022

பிரிவு அலுவலர்

29/8/22

## இணைப்பு-I

**அரசாணை(நிலை)எண்.74, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்(சிஉ_தி)துறை, நாள்.29.08.2022.**

**ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கான துரித மின் இணைப்பு திட்டம் (Tatkal Scheme)**

| வ. எண் | மாவட்டம் | மின் இணைப்புகளின் எண்ணிக்கை | தேவைப்படும் நிதி ரூ. | பயனாளிகளின் பங்கு (10 சதவீதம்) ரூ. | அரசு மானியம் (90 சதவீதம்) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 19 | 65,00,000.00 | 6,50,000.00 | 58,50,000.00 |
| 2 | கோயம்புத்தூர் | 1 | 2,75,000.00 | 27,500.00 | 2,47,500.00 |
| 3 | கடலூர் | 35 | 1,08,75,000.00 | 10,87,500.00 | 97,87,500.00 |
| 4 | தருமபுரி | 34 | 85,50,000.00 | 8,55,000.00 | 76,95,000.00 |
| 5 | திண்டுக்கல் | 42 | 1,06,25,000.00 | 10,62,500.00 | 95,62,500.00 |
| 6 | ஈரோடு | 18 | 49,00,000.00 | 4,90,000.00 | 44,10,000.00 |
| 7 | காஞ்சிபுரம் | 29 | 73,50,000.00 | 7,35,000.00 | 66,15,000.00 |
| 8 | கரூர் | 18 | 46,25,000.00 | 4,62,500.00 | 41,62,500.00 |
| 9 | கிருஷ்ணகிரி | 47 | 1,18,50,000.00 | 11,85,000.00 | 1,06,65,000.00 |
| 10 | மதுரை | 30 | 75,50,000.00 | 7,55,000.00 | 67,95,000.00 |
| 11 | நாகப்பட்டினம் | 20 | 53,25,000.00 | 5,32,500.00 | 47,92,500.00 |
| 12 | நாமக்கல் | 24 | 65,00,000.00 | 6,50,000.00 | 58,50,000.00 |
| 13 | பெரம்பலூர் | 32 | 80,50,000.00 | 8,05,000.00 | 72,45,000.00 |
| 14 | புதுக்கோட்டை | 42 | 1,11,50,000.00 | 11,15,000.00 | 1,00,35,000.00 |
| 15 | இராமநாதபுரம் | 17 | 43,75,000.00 | 4,37,500.00 | 39,37,500.00 |
| 16 | சேலம் | 34 | 88,00,000.00 | 8,80,000.00 | 79,20,000.00 |
| 17 | சிவகங்கை | 31 | 78,75,000.00 | 7,87,500.00 | 70,87,500.00 |
| 18 | தஞ்சாவூர் | 25 | 64,50,000.00 | 6,45,000.00 | 58,05,000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | தேனி | 32 | 81,75,000.00 | 8,17,500.00 | 73,57,500.00 |
| 20 | தூத்துக்குடி | 27 | 67,75,000.00 | 6,77,500.00 | 60,97,500.00 |
| 21 | திருச்சிராப்பள்ளி | 34 | 85,00,000.00 | 8,50,000.00 | 76,50,000.00 |
| 22 | திருநெல்வேலி | 25 | 62,50,000.00 | 6,25,000.00 | 56,25,000.00 |
| 23 | திருவள்ளூர் | 35 | 87,50,000.00 | 8,75,000.00 | 78,75,000.00 |
| 24 | திருவண்ணாமலை | 59 | 1,48,00,000.00 | 14,80,000.00 | 1,33,20,000.00 |
| 25 | திருவாரூர் | 37 | 99,25,000.00 | 9,92,500.00 | 89,32,500.00 |
| 26 | திருப்பூர் | 29 | 75,50,000.00 | 7,55,000.00 | 67,95,000.00 |
| 27 | வேலூர் | 42 | 1,08,75,000.00 | 10,87,500.00 | 97,87,500.00 |
| 28 | விழுப்புரம் | 57 | 1,43,00,000.00 | 14,30,000.00 | 1,28,70,000.00 |
| 29 | விருதுநகர் | 25 | 62,50,000.00 | 6,25,000.00 | 56,25,000.00 |
| | மொத்தம் | 900 | 23,37,75,000.00 | 2,33,77,500.00 | 21,03,97,500.00 |

தெ சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல்//

சி. [signature] 29/8/2022
பிரிவு அலுவலர்.
29/8/22

## இணைப்பு –II

**அரசாணை(நிலை)எண். 74, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்(சிஉ_தி)துறை, நாள்.29.08.2022.**

**பழங்குடியின விவசாயிகளுக்கான துரித மின் இணைப்பு திட்டம் (Tatkal Scheme)**

| வ. எண் | மாவட்டம் | மின் இணைப்புகளின் எண்ணிக்கை | தேவைப்படும் நிதி ரூ. | பயனாளிகளின் பங்கு (10 சதவீதம்) ரூ. | அரசு மானியம் (90 சதவீதம்) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | கடலூர் | 1 | 3,00,000.00 | 30,000.00 | 2,70,000.00 |
| 2 | தருமபுரி | 17 | 42,50,000.00 | 4,25,000.00 | 38,25,000.00 |
| 3 | கிருஷ்ணகிரி | 3 | 9,00,000.00 | 90,000.00 | 8,10,000.00 |
| 4 | நாமக்கல் | 12 | 32,50,000.00 | 3,25,000.00 | 29,25,000.00 |
| 5 | பெரம்பலூர் | 3 | 7,75,000.00 | 77,500.00 | 6,97,500.00 |
| 6 | சேலம் | 30 | 78,25,000.00 | 7,82,500.00 | 70,42,500.00 |
| 7 | திருச்சிராப்பள்ளி | 7 | 17,50,000.00 | 1,75,000.00 | 15,75,000.00 |
| 8 | திருவண்ணாமலை | 7 | 17,50,000.00 | 1,75,000.00 | 15,75,000.00 |
| 9 | வேலூர் | 10 | 26,00,000.00 | 2,60,000.00 | 23,40,000.00 |
| 10 | விழுப்புரம் | 10 | 25,00,000.00 | 2,50,000.00 | 22,50,000.00 |
| | **மொத்தம்** | **100** | **2,59,00,000.00** | **25,90,000.00** | **2,33,10,000.00** |

தெ சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 29/8/2022
29/8/22